**13.09.2022**

**OS.No. 136/2020 DW : 3, திரு. சி. செஞ்சுகாண்**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை...**

கருப்புசெஞ்சி நாயக்கரையும், சின்னா நாயக்கரையும் நான் பார்த்திருக்கிறேன். கருப்புசெஞ்சி நாயக்கர் சின்னா நாயக்கரைவிட வயதில் குறைந்தவர். சின்ன நாயக்கர் 1971ல் காலமானார். நான் 1965ல் பிறந்தேன். என் முதல் விசாரணையில் என் வயதை 56 என்று காட்டியுள்ளேன். 1971ல் எனக்கு 4 வயது தான் இருக்க முடியும் என்றும் ஆகவே அவர்கள் இருவரையும் நான் பார்த்திருக்க முடியாது என்றால் சரியல்ல. குறிப்பாக கருப்புசெஞ்சி நாயக்கர் என்ற ஒரு நபரே இல்லை என்றும் அவரை நான் பார்த்திருக்கவே முடியாது என்றால் சரியல்ல. அவர் என் தந்தையின் அண்ணன் ஆவார். எங்கள் கிராமத்தில் அப்படி ஒரு நபரே இல்லை என்றால் சரியல்ல. 1ம் வாதிக்கு 80 வயதாகிறது என்றும் அவரிடம் கருப்புசெஞ்சி நாயக்கர் என்று யாரும் வந்து பாகம் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் வாய்மொழியாக சொத்துக்களை பிரித்துக் கொண்டார்கள். இன்றுவரை தாவா சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்தில் இருக்கிறது என்றால் சரியல்ல. 1ம் வாதியின் தந்தையான சின்னா நாயக்கரும் அவருக்கு பின் 1ம் வாதியும் தாவா சொத்திற்கு தீர்வை செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் தீர்வை எதையும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ1ல் கருப்புசெஞ்சி நாயக்கர் பெயர் இருப்பதை வைத்து அவரை நாங்கள் சொந்தம் கொண்டாடுகிறோம் என்றால் சரியல்ல. 1996ம் வருடம் வரை வாதிகள் தான் தாவா சொத்தில் பயிர் செய்தார்கள் என்றும் அதற்கு பின்னர் சொத்து

கரம்பு ஆகிவிட்டதால் தற்போது யாரும் பயிர் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதன்பின்னர் தான் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் தந்தை பெயர் சின்னசாமி நாயக்கர். அவரது தந்தை பெயர் காப்புகார செஞ்சு நாயக்கர். எங்கள் ஊரில் சர்க்கரை ஆலை அமைக்க நிலம் கேட்டார்கள் நானும் நிலம் கொடுத்தேன். நிலம் கொடுத்தவர்களுக்கு சர்க்கரை ஆலையில் வேலை கொடுத்தார்கள். நானும் என் தந்தையும் சர்க்கரை ஆலைக்கு 8 சென்ட்-ஐ 29.06.1983ல் வா.சா.ஆ.27 வாரிசு சான்றிதழ் மற்றும் இறப்பு சான்றிதழை மூலம் கிரையம் கொடுத்தோம். சர்க்கரை ஆலையில் எனக்கும் வேலை கொடுத்தார்கள் நியமன ஆணையான வா.சா.ஆ.29ல் 12வது பெயராக என் பெயர் இருக்கிறது. மேற்கூறிய கிரைய ஆவணத்தில் என் தந்தை அவரது தந்தை பெயரை காப்புக்கார செஞ்சு நாயக்கர் என்று குறிப்பிட்டுள்ளார். 09.02.1999ல் நானும், என் தந்தை வகையறா சென்னையை சேர்ந்த ராஜா என்பவருக்கு 76 சென்ட்-ஐ கிரையம் கொடுத்தோம். அது வா.சா.ஆ.22 கிரைய ஆவணம் ஆகும். அதிலும் என் தந்தை அவரது தந்தை பெயரை காப்புக்கார செஞ்சு நாயக்கர் என்று குறிப்பிட்டுள்ளார். பி.வா.சா.ஆ.25 வாரிசு சான்றிதழில் காப்புக்கார செஞ்சு நாயக்கர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. என் தந்தை எனக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் அவரது தந்தை பெயரை கருப்புசெஞ்சி நாயக்கர் என்று எழுதப்பட்டுள்ளது. அது கணக்குப்பிள்ளை செய்த தவறாகும். என் தந்தைக்கு

படிப்பறிவு இல்லை. அவ்விதம் எழுதப்பட்டது அப்போதே எங்களுக்கு தெரியும். கணக்கு பிள்ளையிடம் போய் கேட்டோம். இருந்தால் தவறு இல்லை என்று அவர் சொல்லிவிட்டார். தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும் அதை அபகரிப்பதற்காக நாங்கள் கருப்புசெஞ்சி நாயக்கர் பெயரை பயன்படுத்துகிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எங்களுக்கு உரிமை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. கிராமத்தில் பட்டா பாஸ்புத்தகம் கொடுப்பார்கள். அதில் யார் யாருக்கு எவ்வளவு சொத்து என்று குறிப்பிடுவார்கள். என் தந்தை பட்டா பாஸ்புத்தகத்தை வாங்கவில்லை. அவருக்கு படிப்பறிவு இல்லாததால் வாங்கவில்லை. உண்மை தெரிந்துவிடும் என்பதால் தான் பட்டா பாஸ்புத்தகத்தை நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வாசாஆ5ல் கருப்புசெஞ்சி நாயக்கர் பெயர் இல்லை. அதில் தாவா சொத்தின் சர்வே எண் இல்லை. எங்களுக்கு சொந்தம் இல்லாத சொத்தை பொறுத்து போலி நபர்கள் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணங்களை எழுதி வருகிறோம் என்றும் அந்த ஆவணங்கள் எதுவும் செல்லாது என்றால் சரியல்ல. அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அது செல்லாது என்று அறிவிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பாக பிரிவினையில் என் பெரியப்பாவிற்கு 65 சென்ட் கிடைத்ததாகவும் அதில் தலா 15 சென்ட்-ஐ செட்டில்மெண்ட் மூலம் கொடுத்துவிட்டார் என்று என் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். இவ்வழக்கில் நான் தான் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளேன். அதை 4

மற்றும் 6 பிரதிவாதிகள் அடாப் செய்துள்ளார்கள். எதிர்வழக்குரையில் 10வது பாராவில் காப்புக்கார செஞ்சு நாயக்கர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காப்புக்கார செஞ்சு நாயக்கருக்கு 3 பிள்ளைகள். அது பொய் என்றும் அவருக்கு 4 பிள்ளைகள் என்று நாங்கள் அனுப்பிய பதில் அறிவிப்பில் ஒப்புக்கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. பள்ளிக்கூடத்தான் என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. என் தந்தை எழுதி வைத்த செட்டில்மெண்டில் 4 பிள்ளைகள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதில் 3 பேரை காட்டிவிட்டு 4வதாக என் பெயரை காட்டியுள்ளார். சின்ன செஞ்சு நாயக்கரின் சகோதரி பெயர் சரோஜா என்றால் சரியல்ல. சரோஜா என்பவரின் தந்தை இறந்துவிட்டதாலும் சரோஜா எங்களுடன் ஒத்துவராததாலும் அவரது தந்தையை மறைக்கிறோம் என்றால் சரியல்ல. ரோட்டிற்காக 25 சென்ட் எடுத்துக் கொண்டார்கள். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. தாக்கல் செய்யபோகிறோம். ரோட்டிற்கு 25 சென்ட் எடுத்தால் நான் கூறும் ஆளுக்கு 15 சென்ட் வராது என்றால் சரியல்ல. என் தந்தை எனக்கு 20 சென்ட்-ஐ எழுதி கொடுத்தார். அவருக்கே 15 சென்ட் தான் கிடைத்து என்று நான் கூறும் போது 20 சென்ட்-ஐ கொடுத்திருக்க முடியாது என்றால் சரியல்ல. பதில் அறிவிப்பில் 26 சென்ட் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வெங்கடாசலம் நாயக்கர் 1959ல் காலமானார். ஆகவே இல்லாத வெங்கடாசலம் நாயக்கர் மற்றும் கருப்புசெஞ்சி நாயக்கர் ஆகியோர்கள் சொத்துக்களை பிரித்துக் கொண்டதாக நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல.

முதல் விசாரணையில் பிரதிவாதிகள் கருப்புசெஞ்சி நாயக்கர் குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்று கூறுவது தவறான சங்கதி என்று கூறியுள்ளேன். வீடுகட்டி கடந்த வருடம் தளம் போட்டேன். 2019ல் தான் நாங்கள் வீடுகட்ட ஆரம்பித்தோம் என்றால் சரியல்ல. அப்போது தான் பிரச்சனை ஏற்பட்டது என்றும் நாங்கள் எழுதி கொண்ட பத்திரங்கள் போலியானது என்று வாதிகளுக்கு தெரிந்தது என்றால் சரியல்ல. வாதிகள் எங்கள் மீது நில அபகரிப்பு பிரிவில் புகார் கொடுத்தார்கள். இருதரப்பினர்களிடம் வாரிசு சான்றிதழ் மற்றும் இறப்பு சான்றிதழை கொண்டுவரும்படி சொன்னார்கள். வாதிகள் சின்னா நாயக்கரின் வாரிசு சான்றிதழ் மற்றும் இறப்பு சான்றிதழை கொடுத்தார்கள். நாங்கள் கொடுக்கவில்லை. நாங்கள் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்கிறோம் என்று நாங்கள் சொன்னோம் என்றும் ஆகவே தான் போலீஸார் எங்களிடம் சான்றிதழை கண்டிப்பாக கேட்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கருப்பு செஞ்சி நாயக்கரின் வாரிசு சான்றிதழ், இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்திருக்கிறோம்.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.